**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 144/2018**

| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|---|---|
| NAME | காந்தி | TALUK | பெங்களூர் |
| HUSBAND NAME | குணசேகரன் | RELIGION | இந்து |
| AGE | 53 | OCCUPATION | |
| VILLAGE | பெங்களூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 16.09.2025.

**பிரதிவாதிகள் 2 மற்றும் 4 தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. தாவா சர்வே நெம்பர் 32-ல் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மின் இணைப்பு எண்.37-ல் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.32 யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனது தாத்தாவுடைய சொத்து எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்டது. எனது அப்பா சொத்து குறித்து எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான்.

2. சொத்தை நானும் எனது அண்ணன், தம்பிகளும் கூட்டாக அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். நாங்கள் 25.02.2002-ல் ஒரு பாகப்பிரிவினை ஆவணம் எழுதிகொண்டோம் என்றால் சரிதான். அதில் இந்த தாவா சொத்து குறித்து எந்த பாகமும் எழுதவில்லை என்றால் சரிதான். அதனால் தான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை ராஜேஸ்வரியம்மாள் கிரயம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் கிரயம்பெற்றபோது தெரியாது பிறகு தெரியவந்தது. அது தெரிந்தபிறகு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

3. 2ஆம் பிரதிவாதி என்னிடம் அனுமதி பெற்று தான் தாவா சொத்தை கிரயம் கொடுத்ததாக சொல்கிறார் என்றால் சரியல்ல. விற்பனை செய்த பணத்தை எனக்கு பிரித்து கொடுத்துவிட்டதாக சொல்கிறார் என்றால் சரியல்ல. எனது அனுமதியுடன் கிரயம் கொடுத்ததால் நான் எந்த பாகப்பிரிவினை வழக்கும் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல.

**(3ஆம் பிரதிவாதி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது)**

K KARTHICK ASATH
Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.